


# வளரும் இந்தியா, உயராத மக்களின் வருமானம்... என்ன செய்யப்போகிறது அரசு?

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பயணம் உலகளவில் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாக இருந்து வருகிறது. கடந்த டிசம்பர் மாதம் டாவோஸியில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர், கோவிட் பாதிப்பு காலத்துக்குப் பிறகு இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி பிரமிக்கதக்கதாக இருக்கிறது என்று பாராட்டினார். இப்படி பலரும் நல்ல விதமாகக் கூறிவந்தாலும், உண்மையில் இந்தியப் பொருளாதார நிலையில் சில சிக்கல்கள் இருக்கின்றன. உலகிலேயே வேகமாக வளரும் நாடு என்பது ஒரு விதத்தில் உண்மைதான் என்றாலும், மற்ற நாடுகளோடு ஒப்பிடுகையில் இந்தியப் பொருளாதாரம் 140 கோடி மக்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறதா என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது.

உலக வங்கி, நாடுகளை நான்கு வருமான நிலைகளில் வகைப் படுத்துகிறது. குறை வருமானம் (1135 டாலர் வரை), குறை நடுத்தர வருமானம்

**பேராசிரியர் டி.கே.ஜயராமன்,**
ஆசிய வளர்ச்சி வங்கியின்
முன்னாள் மூத்த பொருளாதார நிபுணர்



*(1136-4495 டாலர்), உயர் நடுத்தர வருமானம் (4496-13,935 டாலர்), உயர் வருமானம் (13,936 டாலருக்கும் மேல்) என்பதுதான் அந்த வருமான நிலைகள்.*

*உலக வங்கியின் இந்த அளவுகோல்களின்படி பார்க்கும்போது இந்தியா குறை நடுத்தர வருமான நாடாகவே உள்ளது. 2007 முதல் முதல் இந்தியா இந்த நிலையில்தான் உள்ளது. இன்றைய இந்தியாவின் சராசரி தனிநபர் ஆண்டு வருமானம் 2,700 அமெரிக்க டாலர் மட்டுமே.*

*வளர்ந்துவரும் பிற சந்தைகளுடன் ஒப்பீடு செய்யும்போது, பிரேசில், சீனா, இந்தோனேஷியா, மலேசியா, தென் ஆப்ரிக்கா ஆகியவை ஏற்கெனவே உயர் நடுத்தர வருமான நிலையை அடைந்துள்ளன. இந்தியா மட்டும் இன்னும் கீழ் நிலையிலேயே உள்ளது. இதனால், 'Middle-income trap' எனப்படும் பொறியிலேயே இந்தியா சிக்கிக்கொண்டுள்ளது. இந்தியாவின் வளர்ச்சி வேகம் நன்றாக இருந்தாலும், வருமான நிலை உயர்வில் இன்னும் பின்தங்கியுள்ளது.*

**இலக்குகள் மற்றும் காலக்கெடுகள்!**

*2025-26 நிதி ஆண்டின் பொருளாதார ஆய்வு அறிக்கையின்படி, இந்தியா 2037-ல் உயர் நடுத்தர வருமான நிலையை அடையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், 2047-ல், அதாவது 100-ம் ஆண்டு சுதந்திர தினத்தைக் கொண்டாடும் ஆண்டில், உயர் வருமான நாடாக மாறும் வாய்ப்பும் உள்ளது. இந்தியா வருடத்துக்கு 7.6%-8% வளர்ச்சியைத் தொடர்ந்து எட்டினால், 2031-32-க்குள் மேல் நடுத்தர வருமான நிலையை அடையலாம் என எஸ்.பி.ஐ வெளியிட்டுள்ள ஆய்வு கூறுகிறது.*

*'Rule of 70'-ன் படி, 8% வளர்ச்சியை நாடு அடைந்து வந்தால் சுமார் 9 ஆண்டுகளில் சராசரி தனிநபர் வருமானம் இரட்டிப்பாகும். எனவே, இந்தியா தனது வளர்ச்சியை 8%-ஆக நிலைநிறுத்த முடிந்தால் 2030-க்குள் பெரிய மாற்றத்தைக் காணலாம். அதற்கு இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவும் ஐந்து துறைகளில் நாம் கவனம் செலுத்தியே ஆக வேண்டும். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.*

**1. உற்பத்தித் துறை**

*உலகளாவிய நிறுவனங்கள் பலவும் சமீப காலங்களில் சீனாவைத் தவிர்த்து, மாற்று உற்பத்தி மையங்களைத் தேடிவருகின்றன. இந்தியா இதற்கான முக்கிய இடமாக தன்னை நிலைநிறுத்திவருகிறது. 2020-ல் அறிமுகமான உற்பத்தி சார் ஊக்குவிப்பு (Production Linked Incentive) திட்டம் மூலம் இந்தியாவில் உற்பத்தியை அதிகரிக்கும் நிறுவனங்களுக்கு நேரடி நிதி உதவி வழங்கப்படுகிறது. நிறுவனங்கள் இந்தியாவில் பொருள்களை உற்பத்தி செய்தால், அவர்களுக்கு விற்பனை மற்றும் உற்பத்தி அடிப்படையில் நிதி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. இதற்காக சுமார் ரூ.1.97 லட்சம் கோடி பல துறைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஸ்மார்ட்போன்கள், மின்னணு சாதனங்கள், மருந்துகள், சோலார் PV மாட்யூல்கள், வாகனங்கள், துணிநூல், சிறப்பு எஃகு போன்ற 14-க்கும் மேற்பட்ட முக்கிய துறைகள் இதில் அடங்குகின்றன. இந்தத் திட்டத்தின் நோக்கம், நாட்டின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து, இறக்குமதி சார்பை குறைத்து, இந்தியாவை உலகளாவிய உற்பத்தி மையமாக மாற்றுவது. இந்தத் திட்டத்தின் மூலம், இந்திய ஜி.டி.பியில் உற்பத்தித் துறையின் பங்களிப்பை சுமார் 25% வரை உயர்த்த இலக்கு வைக்கப்பட்டுள்ளது.*

**2. டிஜிட்டல் மயமாக்கம்**

*UPI, Aadhaar போன்ற டிஜிட்டல் மயமாக்க முன்னெடுப்புகள் இந்தியாவின் பொருளாதாரத்தையே மாற்றியமைத்துள்ளது. அனைவரையும் நிதி கட்டமைப்புக்குள் கொண்டுவருதல், ஃபின்டெக் துறையின் வளர்ச்சி, மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகியவை ஒருவருக்கு வருமானத்தை உயர்த்தும் முக்கியக் காரணிகளாகின்றன.*

**3. பசுமை ஆற்றல்**

*எரிபொருள் இறக்குமதி செலவுகள் இந்தியாவின்*

வளர்ச்சிக்குத் தடையாக உள்ளன. பல்வேறு போர்ச் சூழல்கள் எரிபொருள் விஷயத்தில் நம்மை நேரடியாகப் பாதிக்கின்றன. எனவே, பசுமை ஹைட்ரஜன் திட்டம் மற்றும் சூரிய ஆற்றல் முதலீடுகள், இந்தியாவை பசுமை ஆற்றல் ஏற்றுமதி நாடாக மாற்றும் என எதிர்பார்க்கப் படுகிறது.

**4. உள்கட்டமைப்பு மேம்பாடு**

PM Gati Shakti திட்டம் மூலம் ரயில்கள், சாலைகள், துறைமுகங்கள் ஆகியவற்றை மேம்படுத்தி, ஏற்றுமதியைப் போட்டித்திறன் வாய்ந்ததாக மாற்றுவது மிகவும் முக்கியம்.

**5. திறன் மையங்கள்**

பாரம்பர்ய IT சேவைகளிலிருந்து, உயர் தர ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை சேவைகளுக்கு இந்தியா மாறி வருகிறது. இது உயர்ந்த ஊதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஒருவருக்கு வருமானத்தை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம் ஏஐ தாக்கத்தால் ஏற்படப்போகும் வேலை இழப்புகளைச் சமாளிக்கும் வழிகளையும் தேட வேண்டும்.

ஒரு நாட்டின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் அடிப்படைக் கருவி, கல்வி. 2030-க்குள் உயர் நடுத்தர வருமான நிலையை அடைய இந்தியா கல்வியில் தொடர்ந்து முதலீடு செய்ய வேண்டும். தரமான பள்ளி மற்றும் பல்கலைக்கழகக் கல்வி, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் உலகத் தரத்தில் போட்டியிடும் திறமையை உருவாக்க வேண்டும்.

**மலேசியாவின் அனுபவம் ஒரு பாடம்!**

1960-களில் குறை வருமான நாடாக இருந்த மலேசியா, கல்வி மற்றும் தொழில்நுட்பங்களில் மேற்கொண்ட முதலீட்டின் மூலம், 1997-ல் உயர் நடுத்தர வருமான நிலைக்கு வந்தது. ஆனால், 'Middle-income trap' சிக்கலில் சிக்கி, உயர் வருமான நிலைக்குச் செல்ல முடியாமல் திணறுகிறது. கல்வியறிவை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தினாலும், உயர் கணிதம் மற்றும் அடிப்படை அறிவியல்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப் படாததால், அங்கு தொழில்நுட்பக் கல்வி இன்னும் உலகத் தரத்துக்குக் கீழே உள்ளது.

ஹார்வர்டின் பேராசிரியர் ஜெஃப்ரி சாக்ஸ் டெல்லி பல்கலைக்கழகம் மற்றும் டெல்லி ஐஐடியில் கடந்த டிசம்பரில் நடந்த நிகழ்வுகளில் கூறியது இதுதான்: "படிப்பாளிகள் இருக்கி றார்கள், ஆனால் நமக்குக் கண்டுபிடிப்பாளர் கள்தான் தேவை. வெறும் எழுத்தறிவு போதாது; கண்டுபிடிப்பு திறன்தான் நாட்டை முன்னேற்றும்."

**எதிர்காலத் துறைகள்!**

கல்வியுடன் இணைந்து, புதுமையான கண்டுபிடிப்புகள்தான் இந்தியாவின் வளர்ச்சியை வேகப்படுத்தும். அதற்கு, Artificial Intelligence, Biotechnology, Space Technology, Renewable Energy போன்ற துறைகளில் இந்தியா உலகத் தரத்தில் போட்டியிட வேண்டும்.

**திட்டங்களும் அபாயங்களும்!**

எதிர்காலத்துக்கான திட்டங்களில் உலக அளவில் ஏற்படக்கூடிய அதிர்ச்சிகள், அவற்றால் ஏற்படும் பாதிப்புகள், ஆபத்துகளை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அவை, அரசியல் அதிர்ச்சிகள், போர், எண்ணெய் விலை உயர்வு, உலக நிதி நிலைமையின் சீர்குலைவு, காலநிலை மாற்றம் காரணமாக விவசாயத்தில் பாதிப்பு, தண்ணீர் பற்றாக்குறை மற்றும் சுற்றுச்சூழல் சேதம் போன்றவையாக இருக்கலாம்.

சமீப காலமாக நடக்கும் அமெரிக்கா, இஸ்ரேல்-ஈரான் போர் 10-12 நாள்களில் முடியும் என்று நினைத்தார்கள், ஆனால்,இன்னும்முடிவடையவில்லை. இதனால் உலக எரிசக்தி சந்தை பாதிக்கப்பட்டது. இந்த நிலை நீடித்தால் நம் பொருளாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் பணவீக்கம் அதிகரித்து, இந்தியாவின் வெளிநாட்டு பரிவர்த்தனைகள் சிக்கலாகும்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி பயணம் வேகமாக இருந்தாலும், நாம் இன்னும் கவனம் செலுத்த வேண்டிய விஷயங்கள், சந்திக்க வேண்டிய சவால்கள் நிறையவே உள்ளன. அரசும், தொழில்துறையும் மற்றும் மக்களும் ஒருங்கிணைந்து முயற்சி எடுத்தால் நிச்சயம் எல்லா தடைகளையும் மீறி 2047-ல் இந்தியா உயர் வருமான நாடாக மாறும் வாய்ப்பு உள்ளது.